மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பரமத்தி.

முன்னிலை: **திரு.செ.சுப்ரமணி, பி.ஏ., பி.எல்.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, பரமத்தி.

2022 ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 26 ம் நாள் வெள்ளிக்கிழமை

**அசல் வழக்கு எண்.38/2022**

**CNR NO.TNNMOC0002162021**

தமிழ்நாடு கிராம வங்கி, (முன்பு பல்லவன் கிராம வங்கி)
அதன் தலைமை அலுவலகம், சேலம்.
எஸ்.வாளவந்தி கிளை, பை அதன் கிளைமேலாளர்
1/68, எஸ்.வாளவந்தி அஞ்சல், மோகனூர் தாலூக்கா, நாமக்கல் மாவட்டம்.

......வாதி

–எதிராக–

1. M/s.NSSS நன்செய் இடையார் JLG 024
அதன் உறுப்பினர் சரஸ்வதி (வயது சுமார் 43) க/பெ.காளியப்பன், 5/63, தெற்கு தெரு, நன்செய் இடையார், நாமக்கல் மாவட்டம்.
2. சரஸ்வதி (வயது சுமார் 43) க/பெ.காளியப்பன், 5/63, தெற்கு தெரு, நன்செய் இடையார், நாமக்கல் மாவட்டம்.
3. செந்தாமரை (வயது சுமார் 28) த/பெ.செல்வராஜ், 3/126, கிழக்கு தெரு, நன்செய் இடையார், நாமக்கல் மாவட்டம்.
4. மஞ்சுளா (வயது சுமார் 26) க/பெ.சரவணன், 5/64B, தெற்கு தெரு, நன்செய் இடையார், நாமக்கல் மாவட்டம்.
5. மின்னல்கொடி (வயது சுமார் 45) க/பெ.தர்மலிங்கம், 6/118, தெற்கு தெரு, நன்செய் இடையார், நாமக்கல் மாவட்டம். ....பிரதிவாதிகள்
(2 முதல் 5 நபர்கள் தங்களுக்காகவும், 1 ம் பிரதிவாதிக்காகவும்)

| | |
|---|---|
| வழக்கு தாக்கலான நாள் | 08.12.2021 & 10.02.2022 |
| வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | 15.02.2022 |
| வழக்கு மூலம் | 31.10.2018 & 20.09.2021 |
| தாவா தொகை | ரூ.78,469/– |
| நீதிமன்ற கட்டணம் செலுத்தப்பட்டுள்ள சட்டப்பிரிவு | U/Sec.22 of TNCF |
| செலுத்தப்பட வேண்டிய நீதிமன்ற கட்டணம் | ரூ.2,354.00/– |
| செலுத்தப்பட்டுள்ள நீதிமன்ற கட்டணம் | ரூ.2,355.00/– |
| கூடுதல் நீதிமன்ற கட்டணம் | ரூ.1.00/– |

பிரதிவாதிகள், வாதி வங்கிக்கு செலுத்தவேண்டிய நிலுவைத்தொகை ரூ.78,469/–யும், அதற்கு வழக்கு தாக்கல் நாள் முதல் தொகை வசூலாகும் வரை 14% பின்வட்டியும், செலவுத்தொகையும் கோரியும் வாதி வங்கியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வழக்கு 10.08.2022ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் வழக்கறிஞர் திருமதி.B.மணிமேகலை, அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகளை அழைத்தும் ஆஜராகாததால் அவர்களை பொறுத்து தோன்றா தரப்பினர்களாக தீர்மானிக்கப்பட்டும், வாதி தரப்பு வழக்கறிஞரின் வாதுரை கேட்டறிந்தும் வழக்காவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்து இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு பிறப்பிக்கும்...

**தீர்ப்பாணை**

1. பிரதிவாதிகள் தாவா தொகை ரூ.78,469/–ஐயும், அதற்கு வழக்கு தாக்கல் நாள் முதல் தொகை வசூலாகும் வரை 9% பின்வட்டியும்,

2. வழக்கு செலவு தொகையுடன் சேர்த்து வாதி வங்கிக்கு செலுத்தவேண்டுமென்று தீர்ப்பாணை பிறப்பித்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

(Being Institution fee Rs.2,364.00/–)

| செலவுத்தொகை பட்டியல் | | |
|---|---|---|
| | வாதி தரப்பில் ரூ. | பிரதிவாதிகள் தரப்பில் ரூ. |
| தாவாவிற்கு நீதிமன்ற கட்டணம் | 2354.00 | -- |
| வக்காலத்து நாமாவிற்கு | 10.00 | |
| வழக்கறிஞர் கட்டணம் | | |
| கட்டளை சேர்ப்பிப்பதற்கு | | |
| புராசஸ் தயாரித்த செலவு | | |
| எழுத்துக்கூலி | | |
| மொத்தம் | 2364.00 | |

(உபயவாதிகள் தரப்பில் செலவுத் தொகை பட்டியல் தாக்கல் இல்லை)

**சொத்து விவரம் –** இல்லை

2022ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 26ம் நாளாகிய இன்று என் கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

(sd/-) S.Subramani
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பரமத்தி.